செ.வெ.எண்: 539 நாள்: 24.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப்போட்டிகள் தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெற உள்ளன.

போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5,000, இரண்டாம் பரிசு ரூ.3,000, மூன்றாம் பரிசு ரூ.2,000, என பரிசுத் தொகையும் பாராட்டுச்சான்றும் வழங்கப்பெற உள்ளன. இவை அல்லாமல் அரசுப்பள்ளி மாணவர்கள் இரண்டு பேரைத் தனியாகத் தெரிவு செய்து ஒவ்வொருவருக்கு ரூ.2,000 வீதம் சிறப்புப் பரிசும் வழங்கப்பெற உள்ளது.

போட்டி நடைபெறுமிடம், நாள், நேரம், விதிமுறைகள் குறித்து பள்ளி, கல்லூரிகளுக்குச் சுற்றறிக்கை வாயிலாகத் தெரிவிக்கப்படும். கொரோனா நோய்த்தொற்று தடுப்பு வழிமுறைகளைப் பின்பற்றியும், சமூக இடைவெளியுடனும் போட்டிகள் நடத்தப்பெறும். இப்பேச்சுப்போட்டியில் பங்கேற்று மாணவர்கள் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**